# ஆகஸ்ட்– 31 – வெள்ளி

## புனித ரேமுத்து

**நீதிமான்களே, ஆண்டவரில் களிகூருங்கள்: நீதியுள்ளோர் அவரைப் புகழ்வது பொருத்தமானதே திபா. 33:1**

**முதல் வாசகம்:1 கொரிந்தியர்1 : 17 - 25**

சகோதர சகோதரிகளே, திருமுழுக்குக் கொடுப்பதற்கு அல்ல, நற்செய்தியை அறிவிக்கவே கிறிஸ்து என்னை அனுப்பினார். மனித ஞானத்தின் அடிப்படையிலான சொற்களில் இந்நற்செய்தியை அறிவித்தலாகாது. அவ்வாறு அறிவித்தால் கிறிஸ்துவின் சிலுவை பொருளற்றுப் போய்விடும்.சிலுவை பற்றியச் செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால், மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை.ஏனெனில், "ஞானிகளின் ஞானத்தை அழிப்பேன், அறிஞர்களின் அறிவை வெறுமையாக்குவேன்" என்று மறைநூலில் எழுதியுள்ளது.இவ்வுலகைச் சார்ந்த ஞானி எங்கே? அறிவாளி எங்கே? வாதிடுவோர் எங்கே? இவ்வுலக ஞானம் மடமை எனக் கடவுள் காட்டிவிட்டாரல்லவா?கடவுளுடைய ஞானத்தால் அவரை அறிந்து கொள்ளமுடியும். ஆனால் உலகினர் தம் ஞானத்தால் கடவுளை அறிந்து கொள்ளவில்லை. எனவே மடமை என்று கருதப்பட்ட நற்செய்தியைப் பறைசாற்றியதன் வழியாக நம்பிக்கை கொண்டோரை மீட்கக் கடவுள் திருவுளம் கொண்டார்.யூதர்கள் அரும் அடையாளங்களை வேண்டும் என்று கேட்கிறார்கள் கிரேக்கர் ஞானத்தை நாடுகிறார்கள்.ஆனால் நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்பற்றிப் பறைசாற்றுகிறோம். அச்சிலுவை யூதருக்குத் தடைக்கல்லாகவும் பிற இனத்தாருக்கு மடமையாயும் இருக்கிறது.ஆனால் அழைக்கப்பட்டவர்கள், யூதரானாலும் கிரேக்கரானாலும், அவர்களுக்குக் கிறிஸ்து கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார்.ஏனெனில் மனித ஞானத்தைவிட கடவுளின் மடமை ஞானம் மிக்கது மனித வலிமையைவிட அவருடைய வலுவின்மை வலிமை மிக்கது.

**பதில்பாடல் :** ஆண்டவரது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது.

**நற்செய்தி: மத்தேயு 25 : 1 – 13**

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களிடம் கூறியதாவது :"அந்நாளில் விண்ணரசு எவ்வாறு இருக்கும் என்பதைப் பின்வரும் நிகழ்ச்சி வாயிலாக விளக்கலாம் மணமகனை எதிர்கொள்ள மணமகளின் தோழியர் பத்துப்பேர் தங்கள் விளக்குகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள்.அவர்களுள் ஐந்து பேர் அறிவிலிகள் ஐந்து பேர் முன்மதி உடையவர்கள்.அறிவிலிகள் ஐவரும் தங்கள் விளக்குகளை எடுத்துச் சென்றார்கள் ஆனால் தங்களோடு எண்ணெய் எடுத்துச் செல்லவில்லை.முன்மதியுடையோர் தங்கள் விளக்குகளுடன் கலங்களில் எண்ணெயும் எடுத்துச்சென்றனர்.மணமகன் வரக் காலந் தாழ்த்தவே அனைவரும் தூக்க மயக்கத்தால் உறங்கிவிட்டனர்.நள்ளிரவில், "இதோ மணமகன் வருகிறார். அவரை எதிர்கொள்ள வாருங்கள்" என்ற உரத்தகுரல் ஒலித்தது.மணமகளின் தோழியர் எல்லாரும் எழுந்து தங்கள் விளக்குகளை ஒழுங்குபடுத்தினர்.அப்போது அறிவிலிகள் முன்மதியுடையோரைப் பார்த்து, "எங்கள் விளக்குகள் அணைந்துகொண்டிருக்கின்றன் உங்கள் எண்ணெயில் எங்களுக்கும் கொடுங்கள்" என்றார்கள்.முன்மதி உடையவர்கள் மறுமொழியாக, "உங்களுக்கும் எங்களுக்கும் எண்ணெய் போதுமான அளவு இராமல் போகலாம். எனவே வணிகரிடம் போய் நீங்களே வாங்கிக்கொள்வதுதான் நல்லது" என்றார்கள். அவர்களும் வாங்கப் புறப்பட்டுச் சென்றார்கள். அப்போது மணமகன் வந்து விட்டார். ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடு திருமண மண்டபத்துக்குள் புகுந்தார்கள். கதவும் அடைக்கப் பட்டது.பிறகு மற்றத் தோழிகளும் வந்து, "ஐயா, ஐயா, எங்களுக்குக் கதவைத் திறந்துவிடும்" என்றார்கள்."அவர் மறுமொழியாக, "உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் எனக்கு உங்களைத்தெரியாது "என்றார்.எனவே விழிப்பாயிருங்கள் ஏனெனில் அவர் வரும் நாளோ வேளையோ உங்களுக்குத் தெரியாது "என்றார்.

**தியானம்:** நானே உலகின் ஒளி என்று கூறிய இயேசு, தான் எவ்வாறு மக்கள் அனைவர்க்கும் பிரகாசமாக விளங்கினாரோ அதேபோன்று நாங்களும் பாவத்திலிருந்து விடுதலையடைந்த வர்களாக ஒளியின் மக்களாக வாழ்ந்து பிரகாசமளிக்க எங்களைத் தயார்படுத்த வேண்டுமென்று இன்றைய தியானவாசகங்கள் தெளிவுபடுத்துகின்றன. நற்செய்தி வாசகத்தில் பார்ப்பது போன்று பத்துகன்னியர்கள் இயேசுவை எதிர்கொள்ள சென்றவேளை பத்து கன்னியர்களுள் ஒளியை ஏற்றிகிறிஸ்துவின் வருகைக்காக தயார்படுத்தினார்கள் ஆனால் ஐந்து கன்னியர்களோ அவர்களுடன் மேலும் எண்ணெயும் கொண்டுசென்றார்கள். கிறிஸ்துவின ் வருகையின் போது எண்ணெய் தீர்ந்தவர்களாகதயார் அற்றநிலையில் இருந்தவர்கள் கிறிஸ்துவுடன் செல்வதை இளந்துவிடகிறார்கள். மற்றும் ஐவர்கள் விளக்கை அணையவிடாதுமீண்டும் மீண்டம் எண்ணெய் ஊற்றியவர்களாக இறுதியில் கிறிஸ்துவின் வருகையின் போது இயேசுவும் அவர்களை தன்னுடன் அளைத்துக் கொண்டார். இதன்மூலமாக இன்று நாங்கள் விவேகிளாக இருக்கின்றோமா? அல்லது அறிவிலிகளாக உள்ளோமா? என்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் காரணம் நாங்கள் செய்வதுசரி, தூயவர்களக வாழ்கிறோம் என்று பாவத்திற்கு அடிமைப்பட்டவ்களாக இருளின் பாதையில் பயணம் செய்து கொண்டிருக்கிறோம் அவ்வாறு வாழும் பொழுது எப்படி ஒளியின் பாதையல் பயணித்து இறைவனைஅடையமுடியும். எனவே முதலில் எங்களை மாற்றிக் கொள்ளவேண்டும் அதற்காக எமதுவாழ்வில் குடும்பத்தில் செபஉறவை ஏற்படுத்த வேண்டும், பின்பு எவ்வாறான வகையில் மற்றவர்களுக்கு சென்றடைய வேண்டுமோ அவ்வாறு சென்றடைய தயார்படுத்தி அவருக்கேற்றவகையில் வாழும் பொழுதுஒளியாகியகிறஸ்து இயேசுஎம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் வந்து தயார்நிலையில் இருக்கும் எங்களை தன்னோடுஅழைத்துக்கொள்வார்.